# 'என் மண், என் தேசம்' இயக்கம்

**புது தில்லி, ஜூலை 30:** நாட்டின் சுதந்திரத்துக்காக உயிர்த் தியாகம் செய்த வீரர்களை நினைவுகூரும் வகையில் 'என் மண், என் தேசம்' இயக்கம் தொடங்கப்படும் என 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

வானொலியில் மாதந்தோறும் கடைசி ஞாயிற்றுக்கிழமையில் 'மனதின் குரல்' நிகழ்ச்சி வாயிலாக நாட்டு மக்களிடம் பிரதமர் மோடி உரையாற்றி வருகிறார். அந்த வகையில் ஞாயிற்றுக்கிழமை 103-ஆவது நிகழ்ச்சியில் அவர் ஆற்றிய உரை:

இந்தியாவின் 75-ஆவது சுதந்திர ஆண்டைக் கொண்டாடுவதற்கான சிறப்பு நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் நடத்தப்பட்டன. இதுவரை 2 லட்சத்துக்கும் அதிகமான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. 'ஒவ்வொரு வீட்டிலும் மூவண்ணக் கொடி' இயக்கத்துக்குக் கடந்த ஆண்டு மக்கள் பெரும் வரவேற்பு அளித்தனர்.

அதேபோல, நடப்பாண்டுக்கான சுதந்திர தினத்தின்போதும், வீடுகளில் மக்கள் தேசியக் கொடியைப் பறக்கவிட வேண்டும். அதன்மூலமாக, நமது கடமைகளை உணர்ந்து, நாட்டின் சுதந்திரத்துக்காக உயிர்த் தியாகம் செய்த வீரர்களை நினைவுகூர முடியும். சுதந்திரத்தின் மதிப்பையும் நம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

அந்த வீரர்களின் நினைவாக நடப்பாண்டில் 'என் மண், என் தேசம்' என்ற இயக்கம் தொடங்கப்படும். அந்த இயக்கத்தின் கீழ் 'அம்ருத கலசம்' யாத்திரை நடத்தப்படும். அதன்படி, நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 7,500 சிறிய அளவிலான பானைகளில் மண்ணும் கூடவே மரக்கன்றுகளும், செடிகளும் எடுத்து வரப்படும். அந்தப் பானைகளில் உள்ள மண் அனைத்தும் தில்லி தேசிய போர் நினைவிடத்துக்கு அருகே ஒன்றாகக் கொட்டப்பட்டு, மரக்கன்றுகள் நட்டு வைக்கப்படும்.

**பிரதமர் மோடி அறிவிப்பு**



நாட்டின் சுதந்திரத்துக்காக உயிர்த் தியாகம் செய்த வீரர்களை நினைவுகூரும் வகையில் 'என் மண், என் தேசம்' என்ற இயக்கம் தொடங்கப்படும். ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் சுதந்திரப் போராட்ட வீரர்களை நினைவுகூரும் வகையில் நினைவுச் சின்னம் அமைக்கப்படும். நாட்டில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களும் இந்த முன்னெடுப்பில் கலந்துகொள்ள வேண்டும்.

இது 'ஒரே இந்தியா, தலைசிறந்த இந்தியா' என்பதை வெளிப்படுத்தும்.

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் சுதந்திரப் போராட்ட வீரர்களை நினைவுகூரும் வகையில் நினைவுச் சின்னம் அமைக்கப்படும். நாட்டில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களும் இந்த முன்னெடுப்பில் கலந்துகொள்ள வேண்டும்.

**சுற்றுலா மேம்பாடு:** வாரணாசிக்கு ஒவ்வோர் ஆண்டும் 10 கோடிக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் சென்று வருகின்றனர். அயோத்தி, மதுரா, உஜ்ஜைன் உள்ளிட்ட புனிதத் தலங்களுக்குச் செல்வோர் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதன் காரணமாக, லட்சக்கணக்கான உள்ளூர் மக்கள் வேலைவாய்ப்பு பெறுகின்றனர்.

இந்தியாவில் இருந்து கடத்தப்பட்ட 105 பழங்காலப் பொருள்களை அமெரிக்கா அண்மையில் திரும்ப ஒப்படைத்தது. அந்தப் பொருள்கள் அனைத்தும் 2,500 முதல் 250 ஆண்டுகள் வரை பழைமையானவை. அவை நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவை. டெரகோட்டா, கல், உலோகம், மரம் உள்ளிட்டவற்றைக் கொண்டு அப்பொருள்கள் செய்யப்பட்டிருந்தன.

கடந்த 2016, 2021-ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டபோதும், இதுபோன்ற பழங்காலப் பொருள்களை அந்த நாடு திரும்ப வழங்கியது. இது சமூக வலைதளங்களில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. இளைஞர்கள் நாட்டின் பாரம்பரியம் மீது பெருமை கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

**உலகம் முழுவதும்...:** மத்திய அரசின் இந்த நடவடிக்கைகள், பழங்காலப் பொருள்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தி, அவை திருடப்படுவதைக் குறைக்க உதவும். மேலும், நாட்டின் மதிப்புமிக்க பாரம்பரியம் மீதான மக்களின் ஆர்வத்தையும் அதிகரிக்கச் செய்யும்.

பிரான்ஸுக்கு அண்மையில் பயணம் மேற்கொண்டபோது 100 வயதைக் கடந்த சார்லட் சோபின் என்ற யோகா ஆசிரியரைச் சந்தித்தேன். தனது ஆரோக்கியமான உடல்நலத்துக்கு யோகாவே காரணம் என அவர் தெரிவித்தார். நமது பாரம்பரியத்தைக் கொண்டாடுவதுடன் நின்றுவிடாமல், அதை உலகுக்கும் எடுத்துக் கூற வேண்டும்.

**இயற்கைப் பேரிடர்கள்:** நாட்டின் பல்வேறு பகுதிகளில் அண்மையில் பெய்த கனமழை, வெள்ளம், நிலச்சரிவு உள்ளிட்ட இயற்கைப் பேரிடர்களால் மக்கள் பலர் பாதிக்கப்பட்டனர். பேரிடர்களை ஒருங்கிணைந்த முயற்சியால் எதிர்கொள்ள முடியும் என்பதை மக்கள் மீண்டும் நிரூபித்துள்ளனர்.

**போதைப் பொருள் ஒழிப்பு:** போதைப் பொருள்கள் ஒழிப்பு இயக்கமானது கடந்த 2020-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் தேதி தொடங்கப்பட்டது. இதுவரை ரூ.12,000 கோடி மதிப்பிலான 10 லட்சம் கிலோவுக்கும் அதிகமான போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

மத்திய பிரதேசத்தில் போதைப் பொருள்கள் பயன்பாடு அதிகமாகக் காணப்பட்ட பிசார்பூர் என்ற கிராமம், தற்போது 'மினி பிரேஸில்' என்று அழைக்கப்படும் அளவுக்கு கால்பந்து போட்டியில் சிறந்து விளங்கி வருகிறது. 'மனமிருந்தால் மார்க்கமுண்டு' என்பதற்கு இது சிறந்த உதாரணம்.

**ஹஜ் பயணம்:** ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்வதற்கான கொள்கையில் மத்திய அரசு தொடர்ந்து மாற்றங்களைப் புகுத்தி வருகிறது. அதன் காரணமாக, 4,000-க்கும் அதிகமான முஸ்லிம் பெண்கள் ஆண் துணையின்றி ஹஜ் புனிதப் பயணம் மேற்கொண்டுள்ளனர். இது மிகப் பெரிய மாற்றம். தற்போது அதிக எண்ணிக்கையிலான நபர்கள் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்வதற்கான வாய்ப்புகளைப் பெற்று வருகின்றனர் என்றார் பிரதமர் மோடி.

## கலையின் மூலம் இயற்கைக்கு சேவை: கோவை ஓவியருக்கு பிரதமர் பாராட்டு

**கோவை, ஜூலை 30:** கலையின் மூலம் இயற்கைக்கு சேவை செய்து வரும் கோவையைச் சேர்ந்த ஓவியர் சுரேஷ் ராகவன் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு என பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளார்.



சுரேஷ் ராகவன்

பிரதமர் நரேந்திர மோடியின் 'மனதின் குரல்' நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை ஒலிபரப்பானது. இதில், பிரதமர் பேசுகையில், சூழலியல், விலங்குகள், தாவரங்கள் ஆகிய சொற்களைத் தற்போது அடிக்கடி கேட்கிறோம். இயற்கையின் மீது நேசம் இருந்தால் சிறிய முயற்சிகளைக்கூட மேற்கொள்ளலாம்.

இதற்கு எடுத்துக்காட்டாக கோவை வடவள்ளியில் வசிக்கும் சுரேஷ் ராகவன் உள்ளார். இவர், அழியும் நிலையிலுள்ள விலங்குகள், பறவைகள், தாவரங்கள் ஆகியவற்றோடு ஆர்க்கிட் மலர்களையும் ஓவியம் மூலம் ஆவணப்படுத்தியுள்ளது மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும் எனக் குறிப்பிட்டார்.

பிரதமரின் பாராட்டைப் பெற்ற சுரேஷ் ராகவன் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மேட்டுப்பாளையம் என்ற கிராமத்தில் 1963-இல் பிறந்தவர். சென்னை ஓவியக் கல்லூரியில் விளம்பரத் துறையில் பட்டம் பெற்றுள்ளார். சினிமா, விளம்பர நிறுவனங்கள், தூர்தர்ஷனில் பணியாற்றியவர். தற்போது, கோவையில் உள்ள இந்திய தாவர மதிப்பீட்டு ஆய்வகத்தில் ஓவியராகப் பணியாற்றி வருகிறார்.

மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதியில் அழியும் நிலையில் உள்ள தாவரங்கள், பறவைகள், விலங்குகளை ஓவியமாக வரைந்து வருகிறார்.

சுரேஷ் ராகவன் கூறுகையில், 2017-ஆம் ஆண்டுமுதல் இதுவரை 350-க்கும் மேற்பட்ட ஓவியங்களை வரைந்துள்ளேன். அழியும் நிலையிலுள்ள விலங்குகள், பறவைகளையும் ஓவியமாகத் தீட்ட திட்டமிட்டுள்ளேன். இயற்கை குறித்து எதிர்கால சந்ததியினரும் அறிந்துகொள்ளும் வகையில் நான் வரைந்துள்ள ஓவியங்களை விரைவில் காட்சிப்படுத்த உள்ளேன். பிரதமரின் பாராட்டு எனக்கு கிடைத்த மிகப் பெரிய பரிசு என்றார்.

# வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது பிஎஸ்எல்வி சி-56

## 7 செயற்கைக்கோள்களும் திட்டமிட்டபடி நிலைநிறுத்தம்



ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்த பிஎஸ்எல்வி சி- 56 ராக்கெட்.



**சென்னை, ஜூலை 30:** சிங்கப்பூரின் 7 செயற்கைக்கோள்களுடன் பிஎஸ்எல்வி சி-56 ராக்கெட் ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 30) வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

திட்டமிட்ட புவி வட்டப் பாதையில் செயற்கைக்கோள்கள் நிலைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து இத்திட்டம் வெற்றியடைந்ததாக இஸ்ரோ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) வெளிநாட்டு செயற்கைக்கோள்களை வணிக ரீதியாக விண்ணில் செலுத்தி வருகிறது. அதன்படி, சிங்கப்பூருக்கு சொந்தமான 'டிஎஸ்-சார்' உள்பட 7 செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவுவதற்கு இஸ்ரோவின் என்எஸ்ஐஎல் அமைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.

இந்தச் செயற்கைக்கோள்களை பிஎஸ்எல்வி சி-56 ராக்கெட் மூலம் செலுத்துவதற்கு இஸ்ரோ முடிவு செய்தது. அதற்கான 24 மணி நேர கவுன்ட்டவுன் கடந்த சனிக்கிழமை தொடங்கியது.

**24 நிமிஷங்களில்...:** ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் ஆய்வு மையத்தின் முதல் ஏவுதளத்திலிருந்து பிஎஸ்எல்வி சி-56 ராக்கெட் ஞாயிற்றுக்கிழமை காலை 6.31 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டது.

தரையில் இருந்து புறப்பட்ட 24 நிமிஷங்களில் 7 செயற்கைக்கோள்களும் திட்டமிட்ட சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டன.

இத்திட்டத்தில் முதன்மையாக செலுத்தப்பட்ட டிஎஸ்-சார் செயற்கைக்கோள் 352 கிலோ எடை உடையது.

அதிநவீன புவி கண்காணிப்பு செயற்கைக்கோளான இது, சிந்தடிக் அப்ரேச்சர் ரேடார் தொழில்நுட்பத்தில் இயங்கக்கூடியது. அனைத்துக் கால நிலைகளிலும் துல்லியமாக படங்களை எடுக்கும் திறன் கொண்டது.

இந்தச் செயற்கைக்கோளுடன் வெலாக்ஸ்-ஏஎம் (23 கிலோ), ஆர்கேட் (24 கி), ஸ்கூப்-2(4 கி), நியூலயன் (3 கி), கலாசியா(3.5 கி), ஆர்ப்-12 ஸ்டிரைடர்(13 கி) ஆகிய 6 சிறிய ரக செயற்கைக்கோள்கள் ஏவப்பட்டன. அவை சிங்கப்பூரின் உயர்கல்வி நிறுவன மாணவர்களால் வடிவமைக்கப்பட்டவை. இவை அனைத்தும் பல்வேறு விதமான தொழில்நுட்ப ஆய்வுகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளன.

**பிஎஸ் 4 இயந்திரம்:** பிஎஸ்எல்வி ராக்கெட்டின் இறுதி நிலையில் நிறுவப்பட்டிருந்த பிஎஸ் 4 இயந்திரம் புவி தாழ்வட்டப் பாதையில் இயக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

முன்னதாக, சிங்கப்பூருக்கு சொந்தமான டெலியோஸ்-2 உள்பட 2 செயற்கைக்கோள்கள் பிஎஸ்எல்வி சி-55 ராக்கெட் மூலம் கடந்த ஏப்ரல் 22-ஆம் தேதி விண்ணில் ஏவப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# நவீன பீரங்கிகளை உற்பத்தி செய்யும் ஆவடி கனரக வாகனத் தொழிற்சாலை

## பீஷ்மா, அஜெயா பீரங்கிகளைத் தயாரித்து சாதனை

**சென்னை, ஜூலை 30:** சென்னையை அடுத்த ஆவடியில் உள்ள கனரக வாகனத் தொழிற்சாலை ஆத்மநிர்பர் பாரத் (உள்நாட்டிலேயே தயாரித்தல்) திட்டத்தின் கீழ் பீஷ்மா, அஜெயா பீரங்கிகளை முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரித்து சாதனை படைத்துள்ளது.

இந்திய ராணுவத்துக்கு நாட்டின் பல்வேறு அசாதாரண நிலைகளிலும் எளிதாக பயணித்து எதிரிகளின் இலக்கை தாக்குவதில் பீரங்கிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

அந்த வகையில், ராணுவத்தில் பயன்படும் பீரங்கிகளை நவீன தொழில்நுட்பத்தில் முற்றிலும் உள்நாட்டில் தயாரிக்கும் பணி ஆவடி கனரக வாகனத் தொழிற்சாலையில் நடைபெற்று வருகிறது.

இந்தத் தொழிற்சாலையில் 1961-ஆம் ஆண்டு முதல் இந்திய ராணுவத்துக்கு ரஷிய தொழில்நுட்பத்தில் பீரங்கி உள்ளிட்ட கவச வாகனங்கள் தயாரித்து வழங்கப்பட்டு வருகின்றன.

பாதுகாப்புத் துறையில் தன்னிறைவு அடையும் வகையில் ஆத்மநிர்பர் பாரத் திட்டத்தின் கீழ் உள்நாட்டு மூலப்பொருள்களைக் கொண்டு பீரங்கிகள் தயாரிக்கப்படுகின்றன. பாதுகாப்பு தளவாடங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை சர்வதேச தரத்துக்கு உயர்த்தும் வகையிலும் அவற்றை லாபகரமான தொழில் நிறுவனங்களாக மாற்றும் வகையிலும் 7 ராணுவத் தளவாடங்கள் பெருநிறுவனங்களாக கடந்த 2021-ஆம் ஆண்டு மாற்றப்பட்டுள்ளன.



ஆவடி கனரக வாகனத் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட பீரங்கி (கோப்புப்படம்).

இந்த நிறுவனங்களில் ஒன்றான 'கவச வாகனங்கள் நிகாம்' எனும் நிறுவனம் ஆவடி கனரக வாகன தொழிற்சாலையில் அஜெயா (டி-72), பீஷ்மா (டி-90) உள்ளிட்ட பீரங்கிகளை தயாரித்து வருகின்றன. மேலும், போர்க்காலத்தில் பாலம் போன்று செயல்படும் 'பிரிஜ் லேயர் டாங்கி', நிலத்தில் புதைந்துள்ள கண்ணிவெடிகளைக் கண்டறியும் பீரங்கி உள்ளிட்டவை தயாரிக்கப்படுகின்றன. இந்த நிறுவனம் கடந்த 2021-22 நிதியாண்டில் மட்டும் ரூ.3,323 கோடி மதிப்பிலான தளவாடங்களை உற்பத்தி செய்துள்ளது. இதன் மூலம் ரூ. 3.65 கோடி சேமிக்கப்பட்டுள்ளது. மேலும், நிகழ் நிதியாண்டில் ரூ. 5,648 கோடி மதிப்பிலான ராணுவத் தளவாடங்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**ரூ.500 கோடி சேமிப்பு:** இது குறித்து பாதுகாப்புத் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

மத்திய அரசு பல்வேறு துறைகளில் உள்நாட்டு தயாரிப்புகளை முன்னிலைப்படுத்தி வருகிறது. அந்த வகையில், பாதுகாப்புத் துறையிலும் உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் ஆவடி கனரக வாகனத் தொழிற்சாலையில் எல்லைப் பாதுகாப்பில் பயன்படுத்தப்படும் டாங்கிகள் ஆத்மநிர்பர் பாரத் திட்டத்தின் 'கவச வாகனங்கள் நிகாம்' எனும் நிறுவனம் மூலம் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இதில், அஜெயா பீரங்கியின் 96 சதவீத பாகங்களும், பீஷ்மா பீரங்கியின் 83 சதவீத பாகங்களும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன.

முக்கியமாக, பீஷ்மா பீரங்கியை இயக்க பயன்படுத்தப்படும் 'ஸ்டார்டர் ஜெனரேட்டர்', அஜெயா மற்றும் பீஷ்மா பீரங்கி குண்டுகளை இயக்க பயன்படுத்தப்படும் 'லிங் லோடிங் மிஷின்', வாகன ஓட்டுநர்களுக்கு காற்று செல்லும் வகையில் உள்ள 'வெண்டிலேட்டர் சிஸ்டம்', பீரங்கிக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் அறிவிக்கும் வகையில் 'அலார்ம் சிக்னலிங் யுனிட்', தானியங்கி கட்டுப்பாட்டு அலகு, ரிலே ரெகுலேட்டர் உள்ளிட்ட கருவிகள் முற்றிலும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டு பொருத்தப்படவுள்ளன.

இதன்மூலம் உள்நாட்டு உற்பத்தி மேம்படுவதோடு, மற்ற நாடுகளுக்கும் ராணுவத் தளவாடங்கள் ஏற்றுமதி செய்வதால் உற்பத்தி திறனும் அதிகரிக்கும்.

கடந்த 2013 முதல் பாதுகாப்புத் துறையில் உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தும் முயற்சியின் விளைவாக சுமார் ரூ.500 கோடி சேமிக்கப்பட்டுள்ளன என்றார் அவர்.

# கவனம், பரவும் புற்று!

ஒருபுறம் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட அறிவியல் வளர்ச்சிகள் ஏற்படும்போது, இன்னொருபுறம் ஒட்டுமொத்த மனித இனத்தின் அழிவுக்கான தொற்று நோய்களும், தொற்றா நோய்களும் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. மனித இனத்தின் மிகப் பெரிய சவாலாக மாறிவருகிறது புற்றுநோய் பரவல். புற்றுநோயால் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் ஒன்றாக இந்தியா இருந்து வருகிறது.

இந்தியாவில் புற்றுநோய் பாதிப்பு அதிகரித்து வருவது மட்டுமல்ல, அதற்கு பலியாகும் நோயாளிகளின் எண்ணிக்கையும் அதே போல அதிகரித்து வருகிறது. கடந்த வாரம் வியாழக்கிழமை மக்களவையில் இது குறித்த தகவல்களை அரசு தெரிவித்திருக்கிறது.

2022-இல் மட்டும் இந்தியாவில் 14.61 லட்சம் புற்றுநோய் பாதித்தவர்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டைவிட 35,000 நோயாளிகள் அதிகம் என்பதையும் குறிப்பிட வேண்டும். 2021-இல் 7.89 லட்சம் பேர் புற்றுநோய் பாதிப்பால் உயிரிழந்தார்கள் என்றால், 2022-இல் அந்த எண்ணிக்கை 8.08 லட்சமாக அதிகரித்திருக்கிறது.

2022-இல் மேற்கொள்ளப்பட்ட இன்னோர் ஆய்வின்படி, அதிகாரபூர்வ எண்ணிக்கையைவிட, உண்மையான பாதிப்பு இரண்டு முதல் மூன்று மடங்கு அதிகமாக இருக்கக் கூடும் என்று தெரிகிறது. புற்றுநோய் பாதிப்பு, புற்றுநோயால் உயிரிழப்பு ஆகியவற்றுக்கான விகிதாசாரத்தில் உலகிலேயே முதலிடம் வகிக்கும் நாடாக இந்தியா இருப்பதாகக் கூறப்படுகிறது. இதன் அடிப்படையில் பார்த்தால் புற்றுநோயைக் கண்டறிவது, அதைத் தடுப்பது, குணப்படுத்துவது ஆகியவை குறித்தும், அதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவது குறித்தும் போர்க்கால அடிப்படையில் செயல்பட வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் மக்களவையில் புற்றுநோய் குறித்த கவலைக்குரிய பல தகவல்களை மத்திய சுகாதார அமைச்சர் மன்சுக் மாண்டவியா பதிவு செய்தார். அதன்படி, இந்தியாவில் புற்றுநோய் பாதிப்பு 12.8% அதிகரிக்கக் கூடும் என்று எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தது அதிர்ச்சி அளிப்பதாக இருந்தது. அதன் அடிப்படையில், தரமும், வசதிகளும் கொண்ட புற்றுநோய் மருத்துவமனைகள், அந்த நோயை எதிர்கொள்வதில் முறையான பயிற்சியும், தேர்ச்சியும் பெற்ற மருத்துவர்களுடன் அதிக அளவில் நிறுவப்பட வேண்டிய அவசியத்தை அமைச்சர் வலியுறுத்தியிருந்தார்.

இந்தியாவைப் பொருத்தவரை, அதிக அளவிலான புற்றுநோய் பாதிப்பு மரணங்களுக்கு தாமதமான கண்டறிதல்தான் முக்கியமான காரணம். புற்றுநோய் நிபுணர்களின் கருத்துப்படி, தாமதமான கண்டறிதல், மருத்துவ கட்டமைப்பின் மீது கடும் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. விலை அதிகமான மருந்துகள் தேவையில்லாமல் பெரிய அளவில் வீணாக்கப்படுகின்றன.

ஆரம்ப கட்டத்திலேயே புற்றுநோய் இருப்பது கண்டறியப்படுமானால், இவையெல்லாம் தவிர்க்கப்படலாம். இந்தியாவைப் போன்ற அதிக அளவில் வறுமை கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள் வாழும் நாட்டில், புற்றுநோய் கண்டறியும் கட்டமைப்பு கிராமப்புறங்கள் வரை ஏற்படுத்தப்பட்டால், அதிக அளவிலான உயிரிழப்பையும் கணிசமாகக் குறைத்துவிட முடியும்.

உலக சுகாதார நிறுவனம் சில ஆய்வு முடிவுகளை வெளியிட்டிருக்கிறது. அதன்படி வாய், நுரையீரல், குடல், வயிறு ஆகியவை ஆண்களுக்கும்; மார்பகம், கர்ப்பப்பை வாய் உள்ளிட்டவை பெண்களுக்கும் அதிகமாக புற்றுநோயால் பாதிக்கப்படும் உறுப்புகள் என்று தெரிகிறது. கட்டுப்பாடு இல்லாத வாழ்க்கை முறை, உடல் பருமன், பாரம்பரியமற்ற உணவுகள் (ஜங்க் ஃபுட்), புகையிலைப் பழக்கம், மதுப் பழக்கம் ஆகியவை இந்தியாவில் காணப்படும் அதிகரித்த புற்றுநோய் பாதிப்புக்கான காரணங்கள் என்று உலக சுகாதார நிறுவனம் பதிவு செய்கிறது.

வளர்ச்சி அடைந்த நாடுகளிலும் அதிக  தனிமனித வருவாய் உள்ள நாடுகளிலும் முன்கூட்டியே கண்டறிவு, முறையான ஆரம்ப கால சோதனைகள், மேம்பட்ட சிகிச்சை ஆகியவற்றால் 20% அளவில் உயிரிழப்புகள் தடுக்கப்பட்டிருக்கின்றன. அதே நேரத்தில், ஏழை நாடுகளிலும், இந்தியாவைப் போன்ற வளர்ச்சி அடையும் நாடுகளிலும் போதுமான கட்டமைப்புகள் இல்லாததால் 5% அளவில்தான் பாதிப்புகள் தடுக்கப்படுகின்றன.

இந்தியாவைப் பொருத்தவரை, புற்றுநோய்க்கான சிறப்பு மருத்துவமனைகள் போதிய அளவில் இல்லாதது மிகப் பெரிய பலவீனம். பெரும்பாலும் புற்றுநோய் சிறப்பு மருத்துவமனைகள் பெருநகரங்களில் மட்டுமே இருப்பதால், ஆரம்பகட்ட கண்டறிதல் இருப்பதில்லை. பெரும்பாலான புற்றுநோய் பாதித்தவர்கள் தரமான சிகிச்சை பெறுவதற்கான பொருளாதார வசதி இல்லாமல் இருப்பது இன்னொரு குறை.

எல்லாவற்றையும்விட முக்கியமானது, மக்கள் மத்தியில் அதிகரித்துவரும் புற்றுநோய் பரவல் குறித்த விழிப்புணர்வு இல்லாமல் இருப்பது. ஊடகங்கள் மூலம் மட்டும் அல்லாமல், பள்ளிக்கூடங்கள், வேலை பார்க்கும் இடங்கள் என ஒன்றுவிடாமல் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வுப் பிரசாரம் நடத்தப்படுவது அவசியம். ஊராட்சிகளில் தொடங்கி குறிப்பிட்ட காலவரையில் புற்றுநோய் கண்டறிவு முகாம்களை தொடர்ந்து நடத்துவதன் மூலம் பெரிய அளவில் புற்றுநோய் பரவலை தடுத்துவிட முடியும்.

நரேந்திர மோடி அரசு, 19 மாநில புற்றுநோய் உயர் சிகிச்சை மருத்துவமனைகளையும் 20 துணை மருத்துவ மையங்களையும் ஏற்படுத்துவதாக அறிவித்தது. அவை காலதாமதமில்லாமல் நிறுவப்பட்டு செயல்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். இந்தியா எதிர்கொள்ளும் மிகப் பெரிய சவால் புற்றுநோய் என்பதை ஒவ்வொருவரும் புரிந்துகொண்டால் மாற்றம் அசாத்தியம் அல்ல.

# பொதுப் பாடத் திட்டம் - ஒரு பார்வை

**மா. இராமச்சந்திரன்**

தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பல்கலைக்கழகங்களில் பொதுப்பாடத்திட்ட முறை நடைமுறைக்கு வந்துள்ளது. மாநில அளவிலான உயர்கல்வித் திட்டங்களை மேம்படுத்தவும், மாநிலக் கல்வித் திட்டம், பல்கலைக்கழக மானியக் குழுவின் திட்டம் போன்றவற்றை ஒருங்கிணைக்கவும் உருவாக்கப்பட்ட அமைப்பான 'மாநில உயர்கல்வி மன்றம்' ஆய்வு செய்து அரசுக்குப் பரிந்துரைத்தது.

அடுத்த கல்வியாண்டில் நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்த்த நிலையில், இளநிலைப் பட்டப்படிப்பில் 163 பாடப் பிரிவுகளுக்கும் முதுநிலைப் பட்டப்படிப்பில் 135 பாடப் பிரிவுகளுமாக மொத்தம் 298 பாடப் பிரிவுகள் நடைமுறைக்கு வந்துவிட்டன. இதனால் பேராசிரியர்கள், கல்வியாளர்களிடையே ஒரு பெரும் அதிருப்தி உருவாகியுள்ளது.

உயர்கல்வி மன்றப் பொறுப்பாளர்கள் அண்மையில் நடத்திய கூட்டத்தில் (12-7-23) கலந்துகொண்ட ஆசிரியப் பிரதிநிதிகளிடம், 'இது ஒரு மாதிரிப் பாடத்திட்டம். இதனைப் பல்கலைக்கழகங்கள் ஏற்கலாம். அல்லது மறுக்கலாம். எந்த முடிவும் அந்தப் பல்கலைக்கழகத்தின் பாடத் திட்டக்குழு எடுத்துக் கொள்ளலாம்' என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், அடுத்தநாளே அதற்கு மாறாக பொதுப்பாடத் திட்டம் பற்றிய செய்தி வெளியாகி உள்ளது. உயர்கல்வி அமைச்சர் கலந்துகொண்ட கூட்டத்திலும் இது உறுதி செய்யப்பட்டுள்ளது.

பொதுப்பாடத் திட்டப்படி, தமிழ்,ஆங்கிலம் ஆகிய மொழிப்பாடங்கள் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் 100 சதவீதம் ஒரே மாதிரியாக இருக்கும். பிற பாடங்களில் 75 சதவீதம் ஒன்று போலவும் மீதமுள்ள 25 சதவீதம் பல்கலைக்கழகங்களின் விருப்பத்துக்கு ஏற்பவும் இருக்கும். பல்வேறு 'வெயிட்டேஜ்' முறை மாற்றப்பட்டு ஒரே 'வெயிட்டேஜ்' முறை நடைமுறைப்படுத்தப்படும்.

13 அரசுப் பல்கலைக்கழகங்கள் தனித்தனியான பாடத்திட்டங்களைக் கொண்டிருக்கின்றன. இதற்கென்று ஒவ்வொரு பல்கலைக்கழக பாடத் திட்டக் குழு (போர்டு ஆஃப் ஸ்டடிஸ்) என்ற அமைப்பு இருக்கிறது. இதில் துறையின் மூத்த பேராசிரியர்கள் உட்பட சிறந்த கல்வியாளர்களும் இடம்பெறுவர்.

இக்குழு தயாரித்து, பரிந்துரைக்கும் பாடத் திட்டத்துக்குப் பல்கலைக்கழக கல்விக் குழுவும் (அகடமிக் கவுன்சில்), பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுவும் (சிண்டிகேட்) ஒப்புதல் அளிக்க வேண்டும். அதற்குப் பின்னரே அந்தப் பாடத் திட்டம் நடைமுறைக்கு வரும்.

பொதுவாக, அந்தந்தப் பல்கலைக்கழகத்தின் சூழல், அதைச் சார்ந்த தேவை, மாணவர்களின் வேலைவாய்ப்புக்கேற்ப பாடத் திட்டம் உருவாக்கப்படும். பாடத் திட்டத்துக்கான பாடநூலும் அதற்குத் தொடர்புடைய பார்வை நூல்களும் அதில் தெரிவிக்கப்படும். இதனால் ஒவ்வொரு பல்கலைக்கழகத்துக்கும் தனித்தன்மை இருக்கும். இந்தப் பாடத் திட்டம் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை மாற்றியமைக்கப்படும்.

பாடத்திட்டம் மாற்றம் குறித்து ஓர் ஆண்டுக்கு முன்னரே பாடத்திட்டக் குழு கூடி பாடங்களை வரையறுக்கும். மொழிப்பாடத் திட்டத்தைத் தவிர்த்து, கணிதம், இயற்பியல், வேதியியல், வணிகவியல், வணிக நிர்வாகவியல், பொருளியல் போன்ற பிற முதன்மைப் பாடத்திட்டங்கள் எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் ஓரளவுக்கு ஒன்றுபோல்தான் இருக்கும். அலகுகள் வேண்டுமானால் மாறுபடலாம். ஆனால் சாராம்சம் ஒன்று போல்தான் இருக்கும்.

நடைமுறைக்கு வந்துள்ள பொதுப் பாடத் திட்டத்தால் பல்கலைக்கழகப் பாடத் திட்டக் குழு கேள்விக்குறியாகி, அனைத்துக்கும் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் வாயிலாகப் பாடத்திட்டம் தயாரிக்கும் நிலை உருவாக்கியுள்ளது. மேலும் ஒரே மாதிரியான தேர்வு முறையும் தேர்வுக்கட்டணமும் அறிமுகப்படுத்தும் நிலையும் உள்ளது.

இதனால் பல்கலைக்கழகத்தின் அதிகாரமும், பல்கலைக்கழக மானியக் குழு வழங்கியுள்ள உயர்கல்வி நிறுவனங்களின் உரிமைகளும் பாதிக்கப்படும் என்பது பேராசிரியர்களின் கருத்தாக உள்ளது. 'பல்கலைக்கழகங்களின் அதிகாரம் பாதிக்கப்படாது என்பதோடு, கல்வியின் தரத்தை உயர்த்தும் விதமாகவும், எல்லோருக்கும் வாய்ப்பை அளிக்கும் வகையிலும் பொதுப் பாடத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது' என்று உயர் கல்வித்துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

மாணவர்களின் அறிவுத்திறனைச் சமமாக வளர்ப்பதற்குப் பொதுப்பாடத்திட்டம் உறுதுணை புரியும். இதற்குப் பாடத்திட்டம் ஒன்றுபோல் இருப்பதுபோல தேர்வுத்தாள்களையும் ஒன்றுபோல் வகைப்படுத்த வேண்டும்.

எந்தெந்த பருவங்களில் எந்தெந்தத் தாள் என்ற வரன்முறை இருக்க வேண்டும். எந்த 75 சதவீத பொதுப் பாடத் திட்டத்தை மேற்கொள்ளும்; மீதமுள்ள 25 சதவீதத்தை பல்கலைக்கழகங்கள் எவ்வெவ்வாறு பூர்த்தி செய்யவேண்டும்என்பனவற்றுக்குத்தேவையான விளக்கம் வேண்டும்.

பொதுவாகப்பாடத்திட்டம்என்பது ஒரு பல்கலைக்கழகத்தின் தரத்தைக் காட்டும் கண்ணாடியாகும். அதற்குத் தகுந்தவாறு, ஒவ்வொரு பல்கலைக்கழகமும் பாடத்திட்டத்தை உருவாக்கும். அந்த வகையில் பொதுப் பாடத் திட்டம் அமையுமா என்பது பலரின் சந்தேகமாக உள்ளது.

பள்ளிப்படிப்பு, மருத்துவப் படிப்பில், பொறியியல் படிப்பில் ஒரே பாடத்திட்டம் இருப்பதுபோல கலை, அறிவியல் படிப்பிலும் ஒரே பாடத்திட்டம் கொண்டுவருவது, இருக்கின்ற பல்கலைக்கழகங்களை இணைத்து ஒரே பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கான முயற்சி நடைபெறுகிறதோ என்ற ஐயமும் பேராசிரியர்களிடையே இருக்கிறது.

உயர்கல்வியின் தரத்தை இன்னும் உயர்த்த வேண்டியது காலத்தின் கட்டாயம். அப்படிச் செய்தால்தான் நம் மாணவர்கள் உலகளவில் வெற்றி பெற முடியும். அதற்குப் பாடத் திட்டத்தில் மாறுதல் தேவைதான்.

அரசு பல்கலைக்கழகங்களில் மட்டும் பொதுப் பாடத் திட்டத்தைச் செயல்படுத்துவது போதாது. தன்னாட்சிக் கல்லூரி, நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களிலும் இத்திட்டம் செயல்பட தீவிர முயற்சி எடுக்க வேண்டும்.

EVA STALIN IAS

# பிரதமர் மோடிக்கு நாளை 'லோகமான்ய திலகர் தேசிய விருது'

**புது தில்லி, ஜூலை 30:** மகாராஷ்டிர மாநிலம், புணேயில் செவ்வாய்க்கிழமை (ஆக.1) நடைபெறும் விழாவில், பிரதமர் நரேந்திர மோடிக்கு 'லோகமான்ய திலகர் தேசிய விருது' வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

இதையொட்டி புணே நகருக்கு பயணமாகும் பிரதமர் மோடி, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் அலுவலகம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

புணேயில் உள்ள தக்துசேட் விநாயகர் கோயிலில் செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில் பிரதமர் மோடி வழிபாடு மேற்கொள்ளவிருக்கிறார். அதன்பிறகு, லோகமான்ய திலகர் தேசிய விருது அவருக்கு வழங்கப்படவுள்ளது.

பின்னர், மெட்ரோ ரயில் சேவைகள் உள்பட பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் தொடங்கிவைக்கவுள்ளார். புணே மெட்ரோ முதல்கட்ட திட்டத்தில் பணி முடிந்த இரு வழித்தடங்களில் ரயில் சேவை தொடங்கப்படவுள்ளது. இத்திட்டத்துக்கு பிரதமர் மோடி கடந்த 2016-ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டியிருந்தார்.

நகரின் முக்கிய பகுதிகளை இணைக்கும் இவ்விரு வழித்தடங்களில் உள்ள ரயில் நிலையங்கள், மராட்டிய மன்னர் சத்ரபதி சிவாஜி தொடர்புடைய அம்சங்களை நினைவூட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

மேலும், பிம்ரி-சின்ச்வாட் மாநகராட்சி கட்டியுள்ள கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் ஆலையை பிரதமர் திறந்து வைக்கவுள்ளார். ரூ.300 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள இந்த ஆலையானது, ஆண்டுக்கு 2.5 லட்சம் டன் கழிவுகளை கையாளவிருக்கிறது.

பிரதமரின் வீட்டுவசதி திட்டத்தின்கீழ், பிம்ரி-சின்ச்வாட் மாநகராட்சியால் கட்டப்பட்ட 1,280-க்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் புணே மாநகராட்சியால் கட்டப்பட்ட 2,650-க்கும் மேற்பட்ட வீடுகளை பயனாளிகளிடம் பிரதமர் ஒப்படைக்கவுள்ளார் என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திலக் ஸ்மாரக் மந்திர் அறக்கட்டளையால் கடந்த 1983-இல் ஏற்படுத்தப்பட்ட லோகமான்ய திலகர் தேசிய விருது, சுதந்திர போராட்ட வீரர் பாலகங்காதர திலகரின் பாரம்பரியத்தை முன்னெடுத்துச் செல்லும் தலைவர்களுக்கு வழங்கப்படுகிறது.

தேசத்தின் வளர்ச்சி, முன்னேற்றத்துக்காக குறிப்பிடத்தக்க பங்களிப்பை நல்குபவர்களுக்கு இந்த விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

இந்த விருதை பெறும் 41-ஆவது தலைவர் பிரதமர் மோடி ஆவார். முன்னாள் குடியரசுத் தலைவர்கள் சங்கர் தயாள் சர்மா, பிரணாப் முகர்ஜி, முன்னாள் பிரதமர்கள் வாஜ்பாய், இந்திரா காந்தி, மன்மோகன் சிங் உள்ளிட்டோருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

பிரதமருக்கு விருது வழங்கும் விழாவில் பங்கேற்க தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவாருக்கு அழைப்பு அனுப்பப்பட்ட நிலையில், அவர் பங்கேற்க திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

பாஜகவுக்கு எதிராக 'இந்தியா' என்ற பெயரில் எதிர்க்கட்சிகள் உருவாக்கியுள்ள கூட்டணியில் சரத் பவார் அங்கம் வகிக்கிறார். இந்தச் சூழலில், பிரதமருடன் ஒரே மேடையில் சரத் பவார் பங்கேற்பது குறித்து சில எதிர்க்கட்சித் தலைவர்கள் சந்தேகமும் அதிருப்தியும் வெளியிட்டுள்ளதாக வட்டாரங்கள் தெரிவித்தன.

# இந்தியாவில் கடந்த 3 ஆண்டுகளில் 13.13 லட்சம் பெண்கள் மாயம்

**புது தில்லி, ஜூலை 30:** இந்தியாவில் கடந்த 3 ஆண்டுகளில் (2019-2021) 13.13 லட்சம் சிறுமிகளும் பெண்களும் காணாமல் போயிருப்பதாக மத்திய அரசு வெளியிட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் காணாமல் போன பெண்கள் குறித்த தகவல்களை தேசிய குற்ற ஆவணக் காப்பகம் சேகரித்தது. இந்தத் தகவல்களை மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

கடந்த 2019 முதல் 2021ஆம் ஆண்டு வரை நாடு முழுவதும் 18 வயதுக்கு மேற்பட்ட 10,61,648 பெண்களும், 2,51,430 வயதுக்கு உட்பட்ட சிறுமிகளும் காணாமல் போயுள்ளனர்.

நாட்டிலேயே மத்திய பிரதேசத்தில் தான் அதிக அளவிலான பெண்கள் காணாமல் போயுள்ளனர். அங்கு 2019 முதல் 2021-ஆம் ஆண்டு வரை 1,60,180 பெண்களும், 38,234 சிறுமிகளும் காணாமல் போயுள்ளனர்.

அதைத் தொடர்ந்து மேற்கு வங்கத்தில் இதே காலகட்டத்தில் 1,56,905 பெண்களும், 36,606 சிறுமிகளும் காணாமல் போய்விட்டனர். மகாராஷ்டிரத்தில் 1,78,400 பெண்களும் 13,033 சிறுமிகளும் காணாமல் போயுள்ளனர்.

ஒடிஸாவில் இதே காலகட்டத்தில் 70,222 பெண்களும் 16,649 சிறுமிகளும் காணாமல் போய்விட்டனர். சத்தீஸ்கரில் 49,116 பெண்களும் 10,817 சிறுமிகளும் காணாமல் போய்விட்டனர்.

யூனியன் பிரதேசங்களைப் பொருத்தவரை, தில்லியில் அதிக அளவிலான பெண்கள் காணாமல் போய்விட்டனர்.

தில்லியில் 61,054 பெண்களும் 22,919 சிறுமிகளும் காணாமல் போய்விட்டனர். ஜம்மு-காஷ்மீரில் 8,617 பெண்களும் 1,148 சிறுமிகளும் காணாமல் போய்விட்டனர்.

நாடு முழுவதும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அவற்றில் 2013ஆம் ஆண்டைய குற்றவியல் திருத்தச் சட்டமும் ஒன்றாகும்.

மேலும் 12 வயதுக்கு உட்பட்ட சிறுமிகளை பாலியல் பலாத்காரம் செய்வோருக்கு அதிகபட்சமாக மரண தண்டனை வரை விதிக்க வகைசெய்யும் கடுமையான பிரிவுகளைக் கொண்ட 2018-ஆம் ஆண்டைய குற்றவியல் திருத்தச் சட்டமும் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இது தவிர பெண்கள் தங்களது பிரச்னைகளை எடுத்துக்கூறி நிவாரணம் பெறுவதற்காக 112 என்ற இலவச தொலைபேசி எண்ணை அடிப்படையாகக் கொண்ட கட்டமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது.

அகமதாபாத், பெங்களூரு, சென்னை, தில்லி, ஹைதராபாத், கொல்கத்தா, லக்னௌ, மும்பை ஆகிய நகரங்களில் 'பாதுகாப்பான நகரம்' என்ற திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

ஆபாசமான படங்கள், செய்திகள் தொடர்பாக புகார் அளிக்க இணையக் குற்ற வலைதளத்தை மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த 2018, செப்டம்பர் 20-ஆம் தேதி தொடங்கியுள்ளது என்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தோழி விடுதிகள்: முதல்வர் பெருமிதம்



**சென்னை, ஜூலை 30:** மகளிருக்கென திறக்கப்பட்டுள்ள விடுதிகள், முன்னேறும் பெண்களுக்கான முகவரி என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் ட்விட்டரில் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட பதிவு:

தோழி விடுதிகள், முன்னேறும் மகளிருக்கான முகவரியாகும். மகளிருக்குச் சொத்துரிமை, உள்ளாட்சியில் 33 சதவீதம் ஒதுக்கீடு, உயர்கல்வியை ஊக்குவிக்கும் புதுமைப் பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் என மகளிர் முன்னேற்றத்துக்கான நமது திட்டங்களுக்கு மேலும் வலுசேர்க்கும் திட்டம் இதுவாகும். திராவிட மாடலின் தோழி விடுதிகள், வரலாற்றின் பக்கங்களில் நிலைகொள்ளும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**தோழி விடுதிகள்:** தோழி விடுதிகள் திட்டமானது, சென்னை, செங்கல்பட்டு, பெரம்பலூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி, தஞ்சாவூர், வேலூர், விழுப்புரம் ஆகிய 9 மாவட்டங்களில் 11 மகளிர் விடுதிகளைக் கொண்டு தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் தோழி விடுதிகளில் சேர விரும்பும் பெண்கள் 94999 88009 என்ற கைப்பேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். மேலும், techexe@tnwwhcl.in என்ற இணையதள முகவரியின் மூலம் சந்தேகங்களையும் நிவர்த்தி செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலக பல்கலைக்கழக விளையாட்டுகள்: இந்தியாவுக்கு மேலும் 7 பதக்கங்கள்


அமன் சைனி, பிரகதி

**புது தில்லி, ஜூலை 30:** சீனாவில் நடைபெறும் உலக பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவுக்கு ஞாயிற்றுக்கிழமை 2 தங்கம், 2 வெள்ளி, 3 வெண்கலம் என 7 பதக்கங்கள் கிடைத்தன. இத்துடன் போட்டியில் இந்தியாவுக்கான பதக்கங்கள் எண்ணிக்கை 5 தங்கம், 2 வெள்ளி, 4 வெண்கலம் என 11-ஆக அதிகரித்துள்ளது.

போட்டியின் 2-ஆம் நாளான ஞாயிற்றுக்கிழமை, வில்வித்தையில் காம்பவுண்ட் கலப்பு அணிகள் பிரிவு இறுதிச்சுற்றில் அமன் சைனி, பிரகதி கூட்டணி 157-156 என்ற கணக்கில் தென் கொரிய ஜோடியை வீழ்த்தி தங்கப் பதக்கம் தட்டிச் சென்றது.

காம்பவுண்ட் மகளிர் அணிகள் பிரிவில் பூர்வஷா, பிரகதி, அவ்னீத் அடங்கிய கூட்டணி 224-229 என தென் கொரியாவிடம் வெற்றியை [illegible] வெள்ளி பெற்றது.

e/+TBZW_Rt78fiwtP6c

[illegible] அணிகள் பிரிவில் சங்கம்பிரீத் பிஸ்லா, அமன் சைனி, ரிஷப் யாதவ் ஆகியோர் இணைந்து 229-225 என்ற கணக்கில் தென் கொரியாவை வீழ்த்தி வெண்கலப் பதக்கம் பெற்றனர்.

மகளிர் ரீகர்வ் அணிகள் பிரிவில் சங்கீதா, தனிஷா, ரீதா ஆகியோர் அடங்கிய அணி 5-4 என பிரான்ஸ் அணியை வீழ்த்தி வெண்கலம் பெற்றது.

துப்பாக்கி சுடுதலில், ஆடவர் தனிநபர் 50 மீட்டர் ரைஃபிள் 3 பொசிஷன்ஸ் பிரிவில் ஐஸ்வரி பிரதாப் சிங் தோமர் 461.7 புள்ளிகளுடன் தங்கப் பதக்கம் வென்றார். 25 மீட்டர் ரேப்பிட் ஃபயர் பிஸ்டல் ஆடவர் அணிகள் பிரிவில் விஜய்வீர் சித்து, ஆதர்ஷ் சிங், உதய்வீர் சித்து கூட்டணி 1,729 புள்ளிகளுடன் வெள்ளி பெற்றது.

அதிலேயே அணிகள் பிரிவில் ஐஸ்வரி பிரதாப், சூர்ய பிரதாப், சர்ஜாத் சிங் அடங்கிய அணி வெண்கலப் பதக்கம் பெற்றது.

ACADEMY

# தேசிய கல்விக் கொள்கை: 10 முக்கிய திட்டங்கள்



தேசிய கல்விக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டு 3 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. அக்கொள்கையின் கீழ் பல்வேறு புதிய முன்னெடுப்புகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. மத்திய அரசு இதுவரை நடைமுறைப்படுத்தியுள்ள 10 முக்கிய திட்டங்கள் குறித்து காண்போம்:

**தேசிய பாடத்திட்டம்:** நாட்டில் 3 முதல் 8 வயது வரையிலான குழந்தைகளுக்கெனத் தனி பாடத்திட்டம் வகுக்கப்பட்டது. இவ்வாறு ஒருங்கிணைந்த பாடத்திட்ட முறை வகுக்கப்பட்டது இதுவே முதல் முறை. அத்திட்டத்தின் கீழ் புதிய கற்பித்தல் முறைகளுக்கான வழிகாட்டி கடந்த பிப்ரவரியில் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது. கதை, விளையாட்டை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தல் முறைக்கு அதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது.

**வித்யா பிரவேஷ்:** ஒன்றாம் வகுப்பு மாணவர்களுக்காக கதையை அடிப்படையாகக் கொண்டு 3 மாத கற்பித்தல் முறையை (வித்யா பிரவேஷ்) என்சிஇஆர்டி உருவாக்கியது. ஒன்றாம் வகுப்பில் சேரும் குழந்தைகளைப் பள்ளிக்குத் தயார்படுத்தும் நோக்கில் இது தயாரிக்கப்பட்டது. எழுத்துகள், எண்கள் உள்ளிட்டவற்றைக் கற்றுக் கொள்வதற்கான தயார்நிலையை குழந்தைகளுக்கு ஏற்படுத்துவதோடு, அவர்களின் கற்பனைத் திறன் உள்ளிட்டவற்றை வளர்க்கும் வகையிலும் இது தயாரிக்கப்பட்டிருந்தது. சிக்கிம், மணிப்பூர், கேரளம் ஆகிய மாநிலங்கள் தவிர மற்ற 33 மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் 'வித்யா பிரவேஷ்' திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளன.

**பிஎம் ஸ்ரீ பள்ளிகள்:** இந்தியாவை வளரச் செய்வதற்கான பள்ளிகள் (பிஎம் ஸ்ரீ) திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. அத்திட்டத்துக்கான முதல்கட்ட நிதித் தொகுப்பைப் பிரதமர் நரேந்திர மோடி ஜூலை 29–ஆம் தேதி விடுவித்தார். தேசிய கல்விக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சமத்துவ, ஒருங்கிணைந்த, பன்முகத்தன்மை வாய்ந்த சமூகத்தைக் கட்டமைக்கும் நோக்கில் மாணவர்களின் திறன்களை வளர்ப்பதற்கு அத்திட்டம் முக்கியத்துவம் அளிக்கும்.

**தாய்மொழிக்கு ஊக்கம்:** மாணவர்களுக்குத் தாய்மொழியில் கல்வி கற்பிப்பதற்குத் தேசிய கல்விக் கொள்கை ஊக்கமளிக்கிறது. 12 மாநிலங்களில் 49 பொறியியல் படிப்புகளை 7 பிராந்திய மொழிகளில் வழங்க அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி குழுமம் (ஏஐசிடிஇ) அனுமதி வழங்கியுள்ளது. மருத்துவக் கல்விக்கான புத்தகங்கள் ஹிந்தி மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளன.

மத்திய பல்கலைக்கழக நுழைவுத் தேர்வுகள், ஜேஇஇ–மெயின், நீட்–யுஜி தேர்வுகள் 13 மொழிகளில் நடத்தப்பட்டன. ஏஐசிடிஇ–யால் உருவாக்கப்பட்ட 'அனுவதினி' என்ற செயலி மூலமாக பள்ளி பாடப்புத்தகங்கள் செயற்கை நுண்ணறிவு முறையில் மற்ற மொழிகளில் பெயர்க்கப்பட்டு வருகின்றன. சிபிஎஸ்இ பள்ளிகளில் ஆங்கிலத்துடன் சேர்த்து மற்ற இந்திய மொழிகளிலும் பாடம் கற்பிக்கப்படுவதை உறுதி செய்யும் நோக்கில், அரசமைப்புச் சட்டத்தின் 8–ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 22 மொழிகளிலும் பாடப்புத்தகங்களைத் தயாரிக்க என்சிஇஆர்டி நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**ஒரே நேரத்தில் இரு பட்டப் படிப்புகள்:** கல்லூரிகளில் ஒரே நேரத்தில் இரு பட்டப் படிப்புகளைப் பயில்வதற்கான விதிமுறைகளை பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) வெளியிட்டுள்ளது. அதன்படி, இரு பட்டப் படிப்புகளின் கல்லூரி நேரமும் வெவ்வேறானதாக இருக்க வேண்டியது கட்டாயம். முனைவர் பட்ட (பிஹெச்டி) படிப்புக்கு இந்தத் திட்டம் பொருந்தாது.

**தற்காலிகப் பேராசிரியர்களாக 'நிபுணர்கள்':** துறைசார் நிபுணர்களைத் தற்காலிகப் பேராசிரியர்களாகப் பல்கலைக்கழகங்களும், கல்லூரி நிர்வாகங்களும் இனி நியமிக்க முடியும். நிரந்தரப் பேராசிரியர்களை நியமிப்பதற்கான தகுதிப்பாடுகளை இத்திட்டத்தின் கீழ் கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை. அவ்வாறு தற்காலிகப் பேராசிரியர்களாக நியமிக்கப்படத் தகுதியானவர்களைக் கண்டறிவதற்கான வலைதளத்தை யுஜிசி உருவாக்கியுள்ளது. அந்த வலைதளத்தில் இதுவரை 6,711 நிபுணர்களும், இத்திட்டத்தில் இணைய 152 உயர்கல்வி நிறுவனங்களும் பதிவு செய்துள்ளன.

**நான்காண்டு இளநிலைப் படிப்பு:** தேசிய கல்விக் கொள்கையானது நான்காண்டு இளநிலைப் பட்டப் படிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. அதில், மாணவர்கள் எப்போது வேண்டுமானாலும் இடைநின்று வேறு படிப்புகளைத் தொடருவதற்கான வசதியும் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 19 மத்திய பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட 105 பல்கலைக்கழகங்கள் இந்தப் புதிய பட்டப் படிப்பைக் கடந்த கல்வியாண்டு முதல் வழங்கி வருகின்றன.

**வெளிநாடுகளில் ஐஐடி வளாகங்கள்:** இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (ஐஐடி) வெளிநாடுகளில் கிளை வளாகங்களை அமைக்க தேசிய கல்விக் கொள்கை வழிவகுக்கிறது. அதன்படி, சென்னை ஐஐடி தான்சானியாவின் ஜான்ஜிபாரில் கிளை வளாகத்தை அமைக்கவுள்ளது. அக்டோபர் முதல் அங்கு கல்வி கற்பிக்கப்படவுள்ளது. அதேபோல், தில்லி ஐஐடி சார்பில் ஐக்கிய அரபு அமீரத்திலும் (யுஏஇ), காரக்பூர் ஐஐடி சார்பில் மலேசியாவிலும் கிளை வளாகங்கள் அமைக்கப்படவுள்ளன.

**இந்தியாவில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள்:** வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் கிளை வளாகங்களை இந்தியாவில் அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதற்கான விதிமுறைகளை வகுக்கும் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒல்லோங்காங், டீகின் ஆகிய பல்கலைக்கழங்கள் குஜராத்தின் கிஃப்ட் நகரில் கிளை வளாகங்களை அமைக்க ஏற்கெனவே புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளன.

**இந்திய உயர்கல்வி ஆணையம்:** உயர்கல்வியை ஒழுங்குபடுத்தும் நோக்கில் யுஜிசி, ஏஐசிடிஇ, தேசிய ஆசிரியர் கல்வி குழுமம் (என்சிடிஇ) ஆகியவற்றை ஒருங்கிணைத்து, இந்திய உயர்கல்வி ஆணையத்தை உருவாக்க தேசிய கல்விக் கொள்கை வழிவகுக்கிறது. இது தொடர்பான மசோதா நாடாளுமன்றத்தில் விரைவில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

# பேராசிரியர் மா.நன்னன் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படும்

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு**



சென்னையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பேராசிரியர் மா.நன்னன் நூற்றாண்டு நிறைவு விழாவில், அவரது நூல்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட, அவற்றைப் பெறுகிறார் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி. உடன் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திராவிடர் கழக துணைத் தலைவர் கலி.பூங்குன்றன் உள்ளிட்டோர்.

**சென்னை, ஜூலை 30:** பேராசிரியர் மா.நன்னனின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

மறைந்த மா.நன்னனின் நூற்றாண்டு நிறைவு விழா, சென்னையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த விழாவில் பங்கேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

பேராசிரியர் மா.நன்னன் அகமும் புறமும் அப்பழுக்கற்றவராக நேர்மையானவராக விளங்கியவர். வாழ்நாளெல்லாம் நாட்டுக்காகவும், மொழிக்காகவும் ஓயாது உழைத்துக் கொண்டிருப்பது முக்கியமானது. அது அனைவராலும் முடியாது. பெரியார், முன்னாள் முதல்வர் கருணாநிதி, மா.நன்னன் போன்ற ஒரு சிலரால்தான் முடியும்.

124 புத்தகங்களை நமக்காக உருவாக்கியவர் மா.நன்னன். பிழையின்றி எப்படி எழுத வேண்டும்; பேச வேண்டும் என்பதை கற்பிக்கும் மிகப் பெரிய ஆசானாக அவர் விளங்கினார்.

வாழ்நாளெல்லாம் கொள்கைக்காகவும், கொள்கையின் அடையாளமாகவும் வாழ்ந்தார். குடும்பத்தையும் கொள்கையையும் இணைத்துக் கொண்டு வாழ்ந்தார்.

மா.நன்னன் நூற்றாண்டைக் கொண்டாடும் இந்தத் தருணத்தில், அவரது புத்தகங்கள் நாட்டுடைமையாக்கப்படும். அவரது குடும்பத்தினரோ, உறவினர்களோ வேறு யாரும் இந்தக் கோரிக்கையை முன்வைக்கவில்லை.

யாரும் கோரிக்கை வைக்காமல் இதனைச் செய்கிறேன் என்றால், மா.நன்னன் குடியில் நானும் ஒருவன் என்ற அடிப்படையில்தான் இந்த அறிவிப்பைச் செய்துள்ளேன் என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

விழாவுக்கு, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமை வகித்தார்.

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, துணைமேயர் மகேஷ் குமார், திராவிட இயக்க எழுத்தாளர் திருநாவுக்கரசு, திராவிடர் கழக துணைத் தலைவர் கலி. பூங்குன்றன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.